டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.04.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 259 - Madurai | Online Edition

# மேற்காசியாவில் நிலவி வரும் சூழல் குறித்த அமைச்சகங்களுக்கு இடையேயான ஆலோசனை

புது தில்லி, ஏப்.29

மேற்காசியாவில் மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப, மத்திய அரசு மக்களுக்கு தொடர்ந்து பல்வேறு தகவல்களை வழங்குவதற் கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக இன்று புது தில்லி தேசிய ஊடக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து, வெளியுறவு அமைச்சகங்கள் பங்கேற்றன. இதில் நாட்டில் உள்ள எரிபொருள் கையிருப்பு, கடல்சார் செயல்பாடுகள், அப்பகுதியில் வசிக்கும் இந்தியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகள் மற்றும் முக்கிய துறைகளில் நிலைத்தன்மையை பராமரிப் பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்த தகவல்களை அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் வழங்கினர்.

**ஜவுளி மற்றும் கைவினை உற்பத்தித் துறை குறித்த தகவல்கள்**

மேற்காசியாவில் நிலவி வரும் நெருக்கடியான சூழல் காரணமாக ஜவுளி மற்றும் கைவினை உற்பத்தித்துறை எதிர் கொண்டு வரும் பல்வேறு சிக்கல்கள் குறித்து மத்திய ஜவுளி அமைச்சகம் பல்வேறு தரப்பினருடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறது.

இத்துறையின் சீரான செயல்பாடுகளுக்கு உதவிடும் வகையில், அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்டறிய ஏதுவாக கண்காணிப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி துறைக்கான தடையற்ற விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முக்கியத் துவம் வாய்ந்த துறைகளில் விநியோகத்தில் ஏற்படும் தடைகளுக்கு உடனடி தீர்வு காணும் வகையில் கெயில் நிறுவனத்தின் மூலம்

உடனடி சந்தை வாய்ப்புகளை கண்டறிந்து விநியோக நடவடிக்கைகளை சீராக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விநியோகத்தில் ஏதேனும் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் கண்காணிப்புக் குழு அதற்கான காரணங்களை கண்டறிந்து கெயில் நிறுவன அதிகாரிகளிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வகை செய்கிறது. ஜவுளி மற்றும் கைவினைப் பொருள் உற்பத்தி துறையில் மூலக்கூறுகளுக்கான சுங்க வரிக்கு விலக்கு அளிப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கை களை மத்திய ஜவுளி அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. இதன்படி ஜவுளித் துறையில் பல்வேறு மூலப் பொருட்களுக்கான சுங்கவரிக்கு விலக்கு அளிப்பது தொடர்பான சுங்கத்துறை அறிவிக்கை ஏப்ரல் முதல் தேதியன்று வெளியிடப்பட்டது.

ஜவுளித்துறையில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில், சில பொருட்களுக்கு கூடுதல் கையிருப்பு வைத்திருக்க ஏதுவாக இறக்குமதியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. புவிசார் அரசியலில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் காரணமாக சமையல் எரிவாயு விநியோகம் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு உள்நாட்டு குடும்பங்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு சமையல் எரிவாயு விநியோகம் தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆன்லைன் மூலம் சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செய்வோரின் எண்ணிக்கை 99 சதவீதமாக அதிகரித்துள்ளது. விநியோக அங்கீகார குறியீட்டின் அடிப்படையில் விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் 93 சதவீதம் அளவுக்கு நேரடியாக பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்கிறது. இந்த விநியோக அங்கீகார குறியீடு நுகர்வோரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிற்கு அனுப்பப் படுகிறது.

பாரசீக வளைகுடாவில் நிலவி வரும் கடல்சார் சூழல் குறித்த அண்மைக்கால தகவல்களை உடனுக்குடன் வழங்கும் வகையில் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் பாரசீக வளைகுடா கடற்பகுதி வழியாக இந்திய கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக் கைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வறட்சியை தாங்கி வளர்ந்து நல்ல மகசூல் பெற வேளாண் அதிகாரி அறிவுரை

சேலம், ஏப்.29

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில், வேளாண் பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்ந்து நல்ல மகசூல் கொடுக்க இயற்கை உயிர் உரமான மெத்தலோ பாக்டீரியம் (பி.பி.எப்.எம்) பயன்படுத்த வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா கூறியுள்ளதாவது :

மழையின்றி வறட்சியால் பயிர்களில் மகசூல் பாதிப்பு ஏற்படும். இயற்கை உயிர் உரமான மெத்தலோ பாக்டீரியம் (பி.பி.எஃப்.எம்) பயன்படுத்தி, வறட்சி காலத்திலும் நல்ல மகசூல் பெறலாம். மெத்தலோ பாக்டீரியம் உரத்தினை விதை முளைப்பு திறனை அதிகரிக்கவும், நாற்று வளர்ச்சியை வேகப்படுத்தவும், தாவர வளர்ச்சியை துரிதப்படுத்தவும், பூக்கள், காய்கறிகள் உருவாகி முதிர்ச்சி அடையவும் பழத்தின் தரம் நிறம் மற்றும் விதை எடையை மேம்படுத்தவும் பயன்படுத்தலாம்.

ஒரு ஏக்கருக்கு 1,000 மில்லி பி பி எஃப் எம் பயன்படுத்த வேண்டும். ஒரு லிட்டர் நீரில் 5 மில்லி பி.பி.எஃப்.எம் கலந்து இலை வழியில் தெளிக்க வேண்டும். இது வறட்சியை தாங்கி வளர்ந்து 10% கூடுதல் மகசூல் கொடுக்கும். பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சைக்கொல்லியுடன் பி.பி. எஃப். எம் கலக்க வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அங்கக வேளாண்மையின் சிறப்பு

பூமி உருவாகி, உயிர்கள் தோன்றி வளருவதற்கு தேவையான அனைத்து உணவுப்பொருட்களும் செடி, கொடி மற்றும் மரங்கள் மூலம் தானியங்களாகவும், காய்களாகவும் கனிகளாகவும் கிடைத்தன. பல்வேறு விதமான உயிர்களும், அந்த உயிர் களுக்கு உணவளிக்கும் பிற உயிரினங்களான செடி, கொடி மற்றும் மரங்கள் வாழ்வதற்கு ஐம்பூதங்களே இன்று வரை ஆதாரமாக இருக்கிறது.

எந்த உயிரினமானாலும் கீழ் இருக்கும் நிலத்தை வாழ்விடமாக கொண்டு மற்ற ஐம்பூதங்களான நீர், நெருப்பு மற்றும் காற்று ஆகியவற்றையும் பயன்படுத்தி மேல் இருக்கும் மற்றொரு ஐம்பூதமான ஆகாயத்தை நோக்கி வளர்கிறது. நிலத்தில் உள்ள பாறைகள் மேற்படி ஐம்பூதங்களின் செயல்பாட்டால் சிதைந்து சிறுசிறு துகள்களாக்கப்பட்டு, மேலும் அந்நிலத்தில் வாழும் சிறிய, பெரிய உயிரினங்கள் வாழ்ந்து மடிவதன் மூலம் அவற்றின் உடலகங்கள் மக்கி நன்கு அந்த துகள்களுடன் கலந்து, 75க்கும் மேற்பட்ட சத்துக்களைக் கொண்ட வளமான மண் உருவானது.

இவ்விதம் செழுமையாகவுள்ள மண்ணில் இயற்கையாகவும் தாவரங்கள் விளைந்தன. செயற்கையாகவும் பயிர்கள் விளை விக்கப்பட்டன. நாளடைவில் மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவால் உணவுத்தேவை அதிகரித்ததாலும், அதன் தொடர்ச்சியாக விவசாயம் தொழிலாக உருவெடுத்ததால் செயற்கையான இராசயன உரங்கள் வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி மற்றும் பூசணக்கொல்லிகள் களைக்கொல்லிகள் மரபணு மாற்றங்கள் செய்யப்பட்ட பயிர்கள் என பயன்படுத்தப்பட்டு, அவ்விதம் விளைவிக்கப்பட்ட விளைபொருட்களை உண்டு, அதன் விளைவால் மனித இனம் மற்றும் பிற உயிரினங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

மனிதர்களில் ஆரோக்கிய கேடு மற்றும் இனம் புரியாத நோய்கள் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் தற்போது மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, பாதுகாப்பான தாக, ஆரோக்கியமானதாக மற்றும் தரமானதாக தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்களை தேடிச் செல்கின்றனர். அதற்கான ஓரே தீர்வு, அங்கக வேளாண்மையின் மூலம் இரசாயன உரமிடாமல்

இரசாயன பூச்சி மற்றும் பூசணக்கொல்லிகள் தெளிக்காமல், பயிர் சாகுபடி செய்து 'ஆர்கானிக் ஃபுட்' எனப்படும் உணவு தானியங்களை தயாரித்து வழங்குவதே ஆகும். இதன் மூலம் சுற்றுப்புற சூழ்நிலையும் பாதுகாக்கப்படும், மண்ணும் கெடாமல் இருக்கும், நீர்நிலைகளும் பாதுகாக்கப்படும்.

## அங்கக வேளாண்மையின் நன்மைகள்

அங்கக வேளாண்மையின் மூலம் தயாரிக்கப்படும் கிழங்கு பயிர்களில் கிழங்கு பெரியதாகவும் மற்றும் கீரையில் அதிக தளையும் கிடைக்கிறது. தானியப்பயிர்களில் புரதச்சத்து சற்று குறைவாக இருந்தபோதிலும், தரமான புரதம் அதிக அளவிலும், நல்ல அமினோ அமிலங்கள் அதிக அளவிலும் கிடைக்கிறது.

அங்கக வேளாண்மையின் மூலம் பயிரிடப்பட்ட பயிர் உணவுகளில் மெக்னிசியம்/ இரும்புச்சத்து மற்றும் பாஸ்பரஸ் சத்து அதிக அளவில் காணப்படுகிறது. கால்சியம், சோடியம், பொட்டாசியம் ஓரளவிலும், மாங்கனிஸ், அயோடின், குரோ மியம் மாலிப்டினம், செலானியம், போரான், தாமிரம் வெனடியம் மற்றும் துத்தநாகம் குறைந்தபட்ச அளவிலும் காணப்படுகிறது. ஆக்ஸிஸனேற்றிகளான பாலிபினால், சாலிசிலிக் அமிலம், ரெஸ்வராட்ரால், வைட்டமின் 'சி' மற்றும் கரோட்டினாய்ட்கள் உள்ளன. புற்றுநோயை எதிர்த்து செயல்புரியும் ஆக்ஸிஸ னேற்றிகள் 30 சதவீதம் கூடுதலாக அங்கக வேளாண்மையின் மூலம் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளம் மற்றும் ஸ்ட்ரா பெர்ரிகளில் காணப்படுகிறது. அங்கக வேளாண்மையின் மூலம் சாகுபடி செய்யப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் அழகான வாசனையையும் சிறப்பான ருசியையும் கொண்டு இருக்கிறது. மேலும் அக்காய்களையும் பழங்களையும் நீண்ட நாட்கள் வைத்திருந்து பயன்படுத்தலாம்.

அங்கக வேளாண்மையில் நாட்டு ரகங்களை சாகுபடி செய்தல் வேண்டும். டிரைக்கோகிரமா, மற்றும் சூடோமானாஸ் போன்ற உயிர்ப்பூசணக் கொல்லிகளைக் ஒரு கிலோ விதைக்கு முறையே 4 கிராம் 10 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 5 டன் அளவில் நன்கு மக்கிய தொழுஉரத்தையும், பயிகளுக்கேற்ப உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டிரியா போன்ற வற்றை மண்ணுடன் நன்கு கலந்து இட வேண்டும். மண்புழு உரத்தையும் தயாரித்து இடவேண்டும்.

பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும் சத்துக்கரைசலாகவும் மாட்டு கோமியத்தையும் (800 மில்லி லிட்டர் நீரில் 200 மில்லி லிட்டர் கோமியம் கலந்து), பஞ்சகவ்யா, அமிர்தக்கரைசல் போன்ற வற்றை தயாரித்து சத்துக்கரைசலாகவும், பூச்சி, பூசணக் கொல்லியாகவும் பயன்படுத்தலாம். நொச்சி இலை, சோற்றுக்கற்றாழை பீநாரி என்ற பீச்சங்கு இலை, எருக்கு இலை வேப்பங்கொட்டை ஆகியவற்றை சேர்த்து அரைத்து கரைசல் தயாரித்து பூச்சி, பூசணக்கொல்லியாகவும் பயன்படுத்தலாம்.

இவ்விதமாக அங்கக வேளாண்மையில் ஐம்பூதங்களின் உதவியுடன் அந்த ஐம்பூதங்களையும் மாசுபடுத்தாதவாறு முறையாக அங்கக இடுபொருட்களை தேர்வு செய்து பயிர் சாகுபடியில் உயர் மகசூல் பெற்று விமில்லா உணவை, உயிர்களுக்கு தயாரித்து அளிப்பது தாயுள்ளம் கொண்ட விவசாயிகளின் கடமையாகும். இதன் மூலம் சுற்றுப்புற சூழ்நிலையும் பாதுகாக்கப்படும். தண்ணீர் மாசுபடுவதும் தவிர்க்கப்படும். அதன் பயனாக நோய் நொடியற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்.

தகவல் : *ம.மகேஸ்வரன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை ஆய்வகம், திருநெல்வேலி.*

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நல்ல வருமானம் தரும் நர்சரி கார்டன் தொழில்



நர்சரி கார்டன் தொழில் என்பது செடி, கொடி, மரக்கன்றுகள் மற்றும் மூலிகைகளை வளர்த்து விற்பனை செய்யும் ஒரு லாபகர மான வேளாண் சார்ந்த தொழி லாகும். குறைந்த முதலீடு மற்றும் இடவசதியுடன் தொடங்கக்கூடிய இது, காய்கறி, பூச்செடி, மற்றும் வீட்டுத் தோட்டச் செடிகளுக்கான வரவேற்பால் நல்ல வருமானம் தருகிறது.

உயிருள்ள பொருளான மரக்கன்று, செடி, கொடிகள் கண் களுக்கு விருந்தாகவும், மன கவலையை போக்கும் மருந் தாகவும் இருப்பதால் இவற்றின் மவுசு அபரிமிதமாக பெருகி உள்ளது. மக்களிடையே செடி வளர்ப்பு மோகம் அதிகரித்து உள்ளதால் நர்சரி கார்டன் தொழில் செழிப்படைந்து வருகிறது.

தற்போது வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், தனியார் நிறுவனங்கள், வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் செடி, கொடி, மரக்கன்றுகள் வளர்ப்பு ஆர்வம் மக்களிடையே பெருகி உள்ளது. புதிதாக வீடு கட்டுவோர்கள் வீட்டின் வெளிப்புற வளாகம், ஜன்னல், வராண்டா, படிக்கட்டு, சுற்றுச்சுவர்களில் அழகிய செடிகளை வைத்து அலங்கரிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

தோட்ட நாற்றங்கால் தொடங்குவது சுயதொழிலுக்கு மிகவும் எளிதான ஒரு வழியாகும். இதன் மூலம், ஒரு சிறிய வீட்டுத் தோட்டப் பொழுதுபோக்கை ஒரு வணிக நிறுவனமாக விரிவு படுத்தும் சாத்தியம் உள்ளது. விதைகள் அல்லது தண்டுத் துண்டுகளிலிருந்து செடிகளைப் பெருக்கி, அவற்றை விற்பனை செய்வதன் மூலம், குறைந்தபட்ச முதலீட்டில் தொடங்கலாம்.

நர்சரி கார்டனில் தக்காளி, வெண்டைக்காய், கத்திரிகாய் போன்ற காய்கறி செடிகள், மா, பலா, வாழை, கொய்யா, எலுமிச்சை, மாதுளை, சீத்தா, பப்பாளி, நாவல், சப்போட்டா



போன்ற பழக்கன்று செடிகள், ரோஜா, செம்பருத்தி, மினிநந்தி, நந்தியாவட்டை, கருவேப்பிலை, காகிதப்பூ, குத்துமல்லி, குண்டுமல்லி, அடுக்குமல்லி, சாதிப்பூ, நித்தியமுல்லை, குரோட்டன்ஸ், அரளி, தங்க அரளி, மருதாணி, சிறியாநங்கை, பெரியாநங்கை, மணி ப்ளான்ட் போன்ற வகையிலான பூச்செடிகள், துளசி, நெல்லி, தூதுவளை, கற்றாழை உள்பட மூலிகை மற்றும் வாசனை செடிகள், தென்னை, மூங்கில், விளாமரம், நீர்மருது, பூவரசு, இலுப்பை, நாரத்தை, அசோகா போன்ற பெரிய மரக்கன்றுகள் என பல வகையிலான செடி, கொடி, மரக்கன்றுகள் விற்பனை செய்யலாம்.

செடி வளர்க்கும் முறையை கற்றுக் கொண்டு இந்த நர்சரி கார்டன் தொழிலை நடத்தினால் நல்ல லாபம் பார்க்கலாம். வருடம் முழுவதும் வருமானம் தரக்கூடிய நர்சரி கார்டன் தொழிலுக்கு பெரிய அளவில் முன் அனுபவம் தேவையில்லை. செடி வளர்க்கும் முறையை எளிதாக கற்றுக்கொள்ள முடியும். முதலீடும் குறைந்த அளவே தேவைப்படும். தோட்டம் தொடர்பான அழகியல் உணர்வு இருந்தால் இத்தொழிலில் கொடிகட்டி பறக்கலாம்.

செடிகளை வளர்க்க 4 முதல் 5 சென்ட் இடம் தேவைப்படும். செடிகளை வெயிலில் இருந்து பாதுகாக்க நிழல் வலைக்கூண்டு அமைக்க வேண்டும்.

இதற்கு குறைந்தபட்சம் ரூ.30 ஆயிரம் செலவாகும். பனிக் கூடாரம் அமைக்க ரூ.50 ஆயிரம் செலவாகும். பூக்கும் செடிகளுக்கான மறைமுக வெயில் தரும் கூடாரம் ரூ.30 ஆயிரம் செலவாகலாம்.



50 பூந்தொட்டிகளுக்கும், பூச்செடிகளை வைப்பதற்கான பாலிதீன் கன்டெய்னர்களும் வாங்க ரூ.10 ஆயிரம் செலவாகும். இவை தவிர பாதுகாப்பு வேலி, மண் சமப்படுத்தும் கருவி, தண்ணீர் இறைக்கும் மோட்டார், பைப் போன்ற செலவுகளும் உண்டு. தோராயமாக ரூ.2 லட்சம் வரை தேவைப்படும். இது அடிப்படை கட்டமைப்புக்கான முதலீடு. குறைந்தபட்சம் ரூ.20,000 கொண்டு பொதுவாக மக்கள் பயன்படுத்தக்கூடிய பூச்செடிகள், பழம் தரும் செடிகள், மூலிகைச் செடிகள், அலங்காரச் செடிகள், நிழற்சாலை மரங்கள், வீட்டினுள் வைக்கக் கூடிய செடிகள், பூங்கொத்துச் செடிகள், புல் வகைகள் உள்ளிட்ட செடிகளை வாங்கி வளர்க்கலாம். மிக அதிக விலையுள்ள செடிகளை ஆர்டரின் பேரில் வாங்கி கொடுத்தால் போதும். 2 தொழிலாளர்கள் தேவை. செடிகள் டெலிவரி செய்ய சிறு வாகனம் ஒன்று இருந்தால் விரைவாக பணி நடக்கும்.

வளர்க்கும் செடிகளுக்கு சரியான பராமரிப்பு அவசியமாகும். சரியான நேரத்தில் தண்ணீர் தெளிப்பதும், உரமிடுவதும் நிகழ வேண்டும். 25 தினங்களுக்கு ஒரு முறை மண்புழு உரம், இயற்கை உரம், வேப்பம்புண்ணாக்கு சமஅளவு கலந்து உரமிட வேண்டும். செடிகளில் ஈரப்பதம் எப்போதும் இருக்க வேண்டும். கோடை காலத்தில்தான் செடிகளின் வளர்ச்சி நன்றாக இருக்கும். மழைக்காலத்தில் செடிகள் செழிப்பாக இருக்கும். நோய் இருந்தால் கிளைகளை வெட்டி வெயில் இல்லாத நேரங்களில் மருந்து தெளிக்க வேண்டும். பூந்தொட்டிகளை குறிப்பிட்ட தினங்களுக்கு ஒருமுறை மாற்ற வேண்டும். இலைகள் மூலம் குறைந்த செலவில் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்வோரும் உண்டு. நர்சரி கார்டனில் செடிகள் மட்டுமின்றி தென்னை, மா, சப்போட்டா போன்ற மர நாற்றுக்களையும் வளர்த்தால் கூடுதல் வருமானம் பெறலாம்.

தேடி வரும் வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி குடியிருப்பு பகுதிகள், வணிக நிறுவனங்கள் போன்ற இடங்களில் நேரடியாக தொடர்பு கொண்டு ஆர்டர் எடுத்து டெலிவரி செய்தால் அதிக வருமானம் ஈட்ட முடியும்.

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன் வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். போன் : 82480 80922.***

# காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள்

கடந்த 50 ஆண்டுகளில் மழை பொழிவு அளவு சாரசரியாக 950 மி.மீ என்பது மாறாமல் இருந்தாலும்கூட மழை பொழியும் நாட்களின் எண்ணிக்கையில் பெரும் மாற்றத்தை காலநிலை மாற்றம் ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல.



**மழை பொழி நாட்கள் :** தமிழகத்தை பொருத்தவரை அதாவது 1970-80களில் ஆண்டுக்கு 60 நாட்களில் மழை பரவலாக பெய்து வேளாண்மையில் மகசூலை அள்ளிக் கொடுத்தது. ஆனால் கடந்த 2015-2025 வரை ஆண்டுக்கு 40 நாட்களில் கொட்டி தீர்த்து விடுகிறது. இதனால் மழை பெய்தும் பயனற்ற நிலை தான். விவசாய சாகுபடி உள்ளதாலும் பெரும் வெள்ளம், வறட்சி போன்ற காரணங்களால் இன்று நிலங்கள் மகசூலை கிள்ளிக் கொடுக்கிறது. இதற்கும் கால நிலை மாற்றம் தான் காரணம். முன்பெல்லாம் குடிமாரமத்து பணிகளை உள்ளூர் மக்கள் செய்து தங்களுடைய நீர் நிலைகளை பாதுகாத்து வந்தனர். மக்கள் பங்கேற்பு இல்லாத நீர் மேலாண்மையில் முறைகேடுகளும் தற்போது மேலேங்கி உள்ளன.

**வேளாண்மையில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள்?**

ஆடி பட்டம் தேடி விதைத்த விவசாயிகள் இன்று புரட்டாசி-ஐப்பசியில் விதைக்கின்றனர். ஆட்டு சாணம், மாட்டு சாணத்தை நம்பி விவசாயம் செய்தவர்கள் இன்று உரப் பொடியை (இராசயன உரம்) அள்ளி அள்ளி தெளிக்கின்றனர். கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக களை எடுக்காமலே களைக்கொல்லிகளை தெளித்து மண் மலடாக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபடுகின்றனர்.

ஆண்டுக்கு ஏறத்தாழ 40,000-60,000 டன் இராசயன பூச்சி கொல்லிகளை பயன்படுத்தி சுற்றுப்புற சூழலையும், நன்மை செய்யும் பூச்சிகளை யும் அழித்து வருகின்றனர். இதனால் விவசாயத்தை விட்டு வெளியேறும் மக்களின் எண்ணிக்கை தமிழகத்தில் தான் அதிகம் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த நிலை நீடித்தால் உணவு உற்பத்திக்கு பெரும் சவாலாக இருக்கும்.

**கடல் :** தற்போது கடல் மட்டம் ஆண்டுக்கு ஆண்டு 4.மி.மீ என்ற அளவில் உயர்ந்து வருகிறது. கடலோர பகுதியில் அதிக ஆழ்துளை கிணறுகள் பெருகி வருவதால் நிலத்தடி நீர் குறைந்து உப்பு நீர் ஏற்படுகிறது. காலநிலை மாற்றத்திற்கேற்ப நம்முடைய வேளாண்மை முறைகளை மாற்றி செயல்படுத்த பட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கேரளா மாநிலத்தில் அரியலூர் மாவட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி

அரியலூர், ஏப்.29

அரியலூர் மாவட்டத்தின் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்களுக்கான ஆத்மா திட்டத்தின் மூலம் மாநில பயிற்சிக்காக கேரளா மாநிலத்தில் உள்ள சென்றனர்.




அரியலூர் மாவட்டத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் மாநில அளவிலான பயிற்சிக்கு கேரள மாநிலம் திருவனந்தபுரம், வெள்ளையானி, வேளாண்மை கல்லூரி மற்றும் ஸ்ரீ காரியம் இடத்தில் அமைந்துள்ள மத்திய கிழங்கு வகை பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையம் சென்றனர். வேளாண்மை தொழில் நுட்பங்களை கல்லூரியின் பேராசிரியர்கள் எடுத்துரைத்தார்கள். கல்லூரியில் உள்ள பண்ணைகளுக்கு சென்று தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார்கள். மத்திய கிழங்கு வகை பயிர்களுக் கான ஆராய்ச்சி நிலையத்தில் விஞ்ஞானிகள் டாக்டர் ஜெகன் மற்றும் டாக்டர் சீலா இம்மானுவேல் ஆகியோர்கள் அனைத்து வகையான கிழங்கு வகைகளை பற்றியும் அவற்றின் முக்கியத் துவம் மற்றும் அதன் சிறப்பு இயல்புகளுடன் அதற்கு உண்டான தொழில் நுட்பங் களுடன் எடுத்துரைத்தார்கள். இந்த பயிற்சியில் அரியலூர் மாவட்ட வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான வேளாண்மை வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி, தோட்டக்கலை உதவி இயக்குனர் கண்ணன் மற்றும் கலைமணி, வேளாண்மை அலுவலர் மகேந்திரவர்மன், கலைச்செல்வி மற்றும் சுகந்தி, துணை வேளாண்மை அலுவலர் ராஜதுரை, வேளாண்மை உதவி அலுவலர் ராம்குமார், விற்பனை அலுவலர் கருணாகரன், ஆத்மா திட்டத்தின் வட்டார மேலாளர் செந்தில் ஆகியோர் சென்றனர். இந்த பயிற்சியானது ஐந்து நாட்கள் கொண்டதாகும்.

# உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம்



கடலூர், ஏப்.29

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேற்று முன்தினம் 28.04.2026 அரசகுழி கிராமத்தில் உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைப்பெற்றது. இதில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க. நடராஜன், கலந்துக் கொண்டு நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். மேலும் முனைவர் கமலகண்ணன், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண் வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளு மாறு வலியுறுத்தினார். முன்னோடி விவசாயியான அன்பரசன் (விவசாய மருந்தகம்) இப்பயிற்சியில் கலந்துக் கொண்டு தனது அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரம், அரசகுழி கிராமத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பாரம்பரிய நெல் இரகங்களுக்கு முளைப்புத்திறன் பரிசோதனை செய்து உயர் மகசூல் பெறுவீர்!

வேளாண் பெருமக்கள் தற்போது நெல் உற்பத்தியில் பாரம்பரிய நெல் இரகங்களை சிறப்பாக பயிர் செய்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

விவசாய பெருமக்கள் தாங்கள் தங்களில் வயல்களில் சக விவசாய நண்பர்களிடமிருந்து பாரம்பரிய நாட்டு இரக நெல் மணிகளை பெற்று விளைவித்து வருகின்றனர்.

இலுப்பைப் பூ சம்பா, கொட்டாரச் சம்பா, வாழைப்பூ சம்பா, கருப்பு கவுனி, குருவிக்கார், வாசனை சீரகச் சம்பா, சிவன் சம்பா, கருங்குறுவை, காட்டுயானம், குழியடிச் சம்பா, தூயமல்லி, தங்கச் சம்பா, பூங்கார், கிச்சடிச் சம்பா, வெள்ளைகார் குறுவை போன்ற பல்வேறு பாரம்பரிய நெல் இரகங்களை விவசாய பெருமக்கள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்நெல் இரகங்களின் விதை முளைப்புத்திறனை அறிந்து சாகுபடி செய்வது அவசியமாகிறது. நெல்மணிகளின் முளைப்புத் திறன் 80 சதவீகிதமாக (அதாவது 100 நெல் மணிகளில் குறைந்தபட்சம் 80 நெல்மணிகள் முளைத்திருக்க வேண்டும்) நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கேற்ப ஒரு ஏக்கருக்கு தேவையான விதை அளவு 24 கிலோ என்ற அளவில் பரிந்துரை செய்யப்படுகிறது. நெல்மணிகளின் முளைப்புத்திறன் 80 சதவீதத்திற்கு கீழ் இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு தேவையான பயிர் எண்ணிக்கை குறைந்து அதன் காரணமாக மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆதலால் விவசாய பெருமக்கள் பாளையங்கோட்டை அண்ணாநகர் நிருபர் காலனி என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை ஆய்வகத்தில் தங்கள் கைவசம் உள்ள பாரம்பரிய நெல்விதைகளை 100 கிராம் அளவில் எடுத்து பாலித்தீன் பைகளில் அடைத்து முறையான விண்ணப்பத்துடன் பரிசோதனை கட்டணம் ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- என்ற அளவில் செலுத்தி பயன் பெறுமாறு திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஞா.ஆனந்தி ராதிகா மற்றும் வேளாண்மை அலுவலர் ம.மகேஸ்வரன் கேட்டுக் கொள்கிறார்கள்.

# சேலம் மாவட்ட வானிலை முன்னறிவிப்பு

சேலம், ஏப்.29

சேலம் மாவட்டம், மாவட்ட வேளாண் வானிலை மையம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம், திட்ட ஒருங் கிணைப்பாளர், இரா.விஜயன், மா.இரவி,பெ.கோகிலா மற்றும் செ.பிரபாகரன் கூறியதாவது

**29.04.2026 முதல் 03.05.2026 வரையிலான ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு வருமாறு :**

சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 01 முதல் 03.05.26 வரையில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. பகல் வெப்பம் 38.0° செ.(100.4° பா)—க்குமிகாமலும், இரவு வெப்பம் 26.0° செ. (78.8° பா) யாகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீச அதன் வேகம் மணிக்கு 2-4 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 30-80% மாக நிலவும்.

**பூக்கும் பருவம்**

தற்போது நிலவும் கோடைக்காலத்தில் வேம்பு மற்றும் புங்கன் மரங்கள் பூத்து குலுங்குகின்றன. எனவே இது தேனீக்களுக்கு உகந்த காலமாக உள்ளது. விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் தேனீப்பெட்டியை வைப்பதால், செலவின்றி இந்த மரங்களிலிருந்து இயற்கையான தேன் சேகரிக்கலாம். மேலும், தேனீக்கள் மகரந்தச்சேர்க்கையில் முக்கிய பங்கு வகிப்பதால், வயலில் பயிடப்பட்டுள்ள பயிர்களின் விளைச்சலும் 25 சதவீதம் வரை அதிகரித்து நல்ல மகசூல் ஈட்டலாம். ஒரு ஏக்கருக்கு 4 தேனீப்பெட்டி என்ற அளவில் வைக்க வேண்டும். இந்த பருவத்தில் தேனீப்பெட்டிகளை வைப்பதால், அவற்றை மேலாண்மை செய்வது மிகவும் எளிது.

● **தர்பூசணி**

தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக தர்பூசணி சாகுபடி செய்துள்ள பகுதியில் இலைப்பேன் தாக்குதலினால் சேதம் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஊதா வர்ண ஒட்டும் பொறி ஒரு ஏக்கருக்கு 5 வீதமும், இலைவழி தெளிப்பானாக வேப்ப எண்ணெய் ஒரு லிட்டருக்கு

0.6 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இதை தொடர்ந்து பொருளாதார சேத நிலை தாண்டும் போது தையோமித்தாக்சம் என்ற பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டருக்கு 2 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

**கோடைக் காலத்தில் கறவை மாடுகளுக்கான மேலாண்மை முறைகள்**

● கோடை காலத்தில் (மார்ச் – ஜூன்) கறவை மாடுகள் வெப்ப அழுத்தத்தினால் (Heat Stress) பால் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத்தில் பாதிப்படைய வாய்ப்புள்ளது.

● மேலும் கோடை காலத்தில் பாலில் கொழுப்பு (Fat) மற்றும் கொழுப்பற்ற திட பொருட்களின் (ஹீஹிய்) அளவை நிலைநிறுத்த ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு தீவனத்தில் சோடா உப்பு 40 கிராம் என்ற அளவில் கோடை காலம் முடியும் வரை கொடுக்க வேண்டும்.

● ஒவ்வொரு கறவை மாட்டிற்கும் நாளொன்றிற்கு 70 லிட்டருக்கு மேல் குடி தண்ணீர் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

● மேலும் சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் வைப்பது, நீர் எப்போதும் குளிர்ச்சியாக இருக்க உதவும்.

● கோடையில் பசுந்தீவனம் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

● அதிக வெயில் உள்ள நேரங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் கொட்டகையிலோ அல்லது மர நிழலிலோ தங்க வைக்க வேண்டும்.

● கொட்டகையின் கூரையில் நீர் தெளிப்பான்கள் பொருத்தப் பட்டிருக்க வேண்டும். கால்நடைகளின் உடலுக்குத் தெளிப் பான்கள், தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் கருவிகள் போன்றவை மூலம் தண்ணீர் தெளிக்க வேண்டும். இது கால்நடைகளின் உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.

மேலும் விபரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் – 636 203 தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நவீன வேளாண்மையில் பசுந்தாள் உரப்பயிர்களின் முக்கியத்துவம்

பசுந்தாள் உரங்களை நமது விவசாயிகள் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் எருக்கு, கொளிஞ்சி போன்ற செடிகளை உரமாகப் பயன்படுத்தினார்கள்.

**பசுந்தாள் உரங்களின் சிறப்புகள்**

- தழைச்சத்தை மண்ணில் நிலைப்படுத்துவதால் மண்ணின்



வளத்தைப் பாதுகாக்கிறது.

● எளிதில் மக்கும் தன்மை உடையது

● மண்ணில் இடுவதால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் செயல்களை ஊக்குவிக்கிறது. இதனால் பயிருக்குத் தேவையான உணவுப் பொருட்கள் விரைவில் கிடைக்க ஏதுவாகிறது.

● மண்ணில் கட்டமைப்பையும் நன்றாகச் சீராக்குகிறது. ஆதன் மூலம் மண்ணிற்கு அதிக அளவு நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் திறனும் ஏற்படுத்துகிறது.

● பயிருக்குத் தேவையான சத்துக்களை மண்ணின் அடிப்பாத்திலிருந்து மேற்குபகுதிக்குக் கொண்டு வருவதால் மண்ணின் வளம் நீடிக்கப்பயன்படுகிறது.

**பசுந்தாள் பயிர்களின் பண்புகள்**

களிமண் பாங்கான இது மிகச் சிறந்த பசுந்தாள் பயிராகும். முக்கியமாக களர் நிலங்களைச் சீராக்குவதில் இதன் பங்கு இன்றியமையாதது. இது வேகமாக வளரக் கூடியது. தண்ணீர் தேக்கத்தையும் வறட்சியையும் ஒரளவு தாங்கி வளரும். இரண்டில் இருந்து நான்கு மாதங்களுக்குள் ஒரு ஏக்டரில் 10-20 டன் தழையைக் கொடுக்க வல்லது. ஒரு ஏக்கருக்கு 20-25 கிலோ விதையை உபயோகிக்கலாம். இதனை 45-50 நாட்களில் மடக்கி உழுது எருவாக உபயோகிகத்துக் கொள்ளலாம்.

**மணிலா அகத்தி**

மணிலா அகத்தி பிலிப்பைன்ஸ் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து 1985 ல் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. செஸ்பேனியா ரோஸ்ட்ரெட்டா எனப்படும் மணிலா அகத்தி வேர்ப்பாகத்துடன் தண்டுப்பாகத்திலும் வேர் முடிச்சுகளைக் கொண்டுள்ளது. நீர் தேக்கமுள்ள நெல் பயிரிடும் நன்செய் நிலங்களில் நன்றாக வளர்ந்து காற்றிலிருந்து அதிகச் தழைச் சத்தினைக் கிரகித்து தனது தண்டு மற்றும் வேர் முடிச்சுகளில் தேக்கி மக்கிய பிறகு விரைவாக நெல்லுக்குத் தரும் தன்மை உடையது. கோடைப்பருவத்தில் இதன் வளர்ச்சி அதிகம். அதிகம் நெல் வயலில் இடையேயும் இதனை வளர்த்து அடுத்த நெல் பயிருக்குப் பசுந்தாள் உரமாக உபயோகிகத்துக் கொள்ளலாம்.

கொள்ளலாம். வரப்புகளின் ஓரங்களிலும் இரண்டு பயிர்களுக்கு இடையேயுள்ள குறுகிய காலத்தில் தனிப் பயிராகவும் பயிரிட்டு மடக்கி உழுது விடலாம். தண்ணீர் தேங்கியுள்ள வயல்களிலும் இது நன்கு வளரக்கூடியது. 30 முதல் 40 கிலோ விதை ஒரு எக்டருக்குத் தேவைப்படும். இதனை ஊடுபயிராக நெல்லில் 1.5 மீ இடைவெளியில் ஒரு வரிசையாகப் பயிரிட்டு பின் 45-60 நாட்களில் வெட்டி நிலத்தில் கலக்கலாம்.

**சணப்பை**

சணப்பை மிக வேகமாக வளரக்கூடியது இப்பயிர் தழை உரத்திற்காகவும் இதிலிருந்து கிடைக்ககூடிய நாருக்காவும் வளர்க்கப்படுகிறது. இதை 45 நாட்களில் மடக்கி உழுது தழை உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். தண்ணீர் தேங்கி இருந்தால் அதன் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்படும்.

நெல் கரும்பு ராகி சோளம் கோதுமை போன்ற பயிர்களுக்கு சணப்பை ஏற்ற பசுந்தாள் உரப் பயிராகும்.25-35 கிலோ விதையை ஒரு எக்டருக்குப் பயன்படுத்தலாம். இது தீவனப் பயிராகவும் பயன்படுத்தப்படுகிறது. இதனை மரப் பயிர்களுக்கு அடியிலும் இடையேயும் வளர்த்து மடக்கி உழுதும் பயன் பெறலாம்.

**கொளிஞ்சி**

மணற்பாங்கான நிலங்களில் இதன் வளர்ச்சி நன்கு காணப்படுகின்றது. வறட்சியைத் தாங்கும் தன்மையுடையது. ஒரு முறை விதை விசத்ததால் வளர்ந்த பயிரிலிருந்து சிதறி முளைக்கும் விதைகளால் அடுத்தடுத்த பருவங்களிலும் இந்தப் பயிர் தொடர்ந்து முளைக்கும் தன்மையுடையது.

மாடு மேயாததால் இதனை கோடைப் பருவத்தில் வயலில் தானே வளர்வதும் இதன் சிறப்பாகும். ஒரு ஏக்டருக்கு 15 முதல் 20 கிலோ விதை தேவைப்படும். இரண்டு மூன்று ஆண்டுகள் விதைத்து வந்தால் பின்னர் தானே தோன்றக்கூடிய ஒரு பயிராகும்.

**நரிப்பயிறு**

இதனை தானியப் பயிராகவும், மாட்டுத் தீவனமாகவும், எருவாகவும் பயன்படுத்தலாம். பயிர் நன்கு வளர்ந்ததும் ஒரிருமுறை வெட்டிவிட்டு தீவனமாகப் பயன்படுத்திக் கொண்டு

பின்னர் தழை உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். குறிப்பாக களிமண் பாங்கான நெல் தரிசு நிலங்களில் இந்தப் பயிர் நன்றாக வளர்ந்து அதிகப் பசுந்தாள் கொடுக்கக்கூடியது. இதனை நெல் அறுவடைக்கு ஒரு வாரத்திற்கு முன்பு பயிரின் இடையில் ஓர் தொடர் பயிராகவும் விதைக்கலாம் ஒரு எக்டருக்கு 10-15 கிலோ விதை தேவைப்படும். இது ஏக்டருக்கு 8-10 டன் வரை தழையைக் கொடுக்கக்கூடியது.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.*

# எள் (வி.ஆர்.ஐ 4) பயிரில் வயல் விழா



கடலூர், ஏப்.29

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக எள்(வி.ஆர்.ஐ 4) பயிரில் வயல் விழா 29.04.2026 அன்று (மங்களூர் வட்டாரம்) கொளவாய் கிராமத்தில் நடைப்பெற்றது.

இப்பயிற்சியின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், எள் சாகுபடி தொழில்நுட்பங்கள், புதிய இரங்கள், விதை நேர்த்தி, உயிர் உரங்கள், நோய் எதிர் உயிர் கொல்லி விதை நேர்த்தி, களை நிர்வாகம் ஆகியவற்றை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். எள் பயிரில் பூக்கும் தருணத்தில் கள ஆய்வு செய்யப்பட்டு, கலப்பினங்களை கலைத்து விடுமாறு விதை உற்பத்தியாளர்களுக்கு அறிவுறுத்த பட்டது. வருமுன் காக்கும் பொருட்டு வேப்பம் எண்ணெய் கரைசலை தெளிக்குமாறு பரிந்துரைத்தார். அறுவடைக்கு பின் சரியான ஈரப்பதத்தில் (8-9%) எள் விதைகள் இருக்குமாறு விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சியில், மங்களூர் வட்டாரம், கொளவாய் கிராமத்தை சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# சேலம் மாவட்ட மானாவாரி சிறுதானிய பயிர் சாகுபடி விவசாய பெருமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

கோடை மழைக்குப் பின், கோடை உழவு மேற்கொண்டு மானாவாரி பட்டத்தில் சிறுதானியங்களான சாமை, தினை, குதிரைவாலி, வரகு, பனிவரகுமற்றும் கம்பு சாகுபடி மேற்கொள்ளவிருக்கும் சேலம் மாவட்ட விவசாய பெரு மக்களுக்கு ஒரு வேண்டுகோள்.

சிறுதானியங்கள் சாகுபடியானது மானாவாரி விவசாயத்தின் முதுகெலும்பாக உள்ளது. சிறுதானியங்களை உணவில் சேர்ப்பதன் மூலம் இரத்த சோகை இதய பிரச்சனைகள் மற்றும் சர்க்கரை நோய் முதலியவற்றை கட்டுப்பாட்டில் வைக்கலாம்.

எனவே சிறுதானிய உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் தரமான மற்றும் சான்று பெற்ற விதைகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வாங்கி விதைப்பதற்கு பயன்படுத்த வேண்டும். இவ்வாறு சான்று செய்யப்பட்ட விதைகள் நல்ல முளைப்புத்திறன், புறத்தூய்மை, போதுமான ஈரப்பதம் கொண்டதாக இருப்பதனால் நல்ல மகசூல் கிடைக்கும்.

விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளையே சாகுபடி பணிக்கு பயன்படுத்துவதாக இருப்பின் அதன் தரத்தினை பரிசோதித்து அறிந்து கொண்டு சாகுபடிக்கு பயன் படுத்த வேண்டும். விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள சிறுதானிய விதைகளின், முளைப்புத்திறன் அறிந்து கொள்ள சாமையாக இருப்பின் 70 கிராமும், குதிரைவாலி, வரகு எனில் 80 கிராமும், தினையாக இருப்பின் 90 கிராமும், பனிவரகு எனில் 150 கிராமும் துணிப்பையில் எடுக்க வேண்டும். மேலும் விதையின் ஈரப்பதத்தினை பரிசோதிப்பதற்கு ஏதுவாக 100 கிராம் விதையினை பாலித்தீன் பையிலும் தனித்தனியாக எடுத்து சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், அறை எண் 403-ல் இயங்கி வரும் சேலம் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தில், நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதத்தினை அறிந்து கொள்ளலாம். ஒரு விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணம் ரூ.80/- மட்டுமே ஆகும்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396